**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 21/2011**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : சொக்கலிங்கம் | **Caste** | : | |
| **Father's Name** | : சின்னலெட்சுமணன் | **Calling** | : | கூடுதல் இயக்குநர் (ஓய்வு) |
| **Village** | : தேவகோட்டை | **Religion** | : | |
| **Taluk** | : | **Age** | : | 67 |
| | | **Dated** | : | **17.02.2026** |

**17.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 **திரு. சொக்கலிங்கம்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர். 1ம் ஆஜர் இல்லை. 355 BNSS Petition filed and allowed. 3,4 எதிரிகள் தனியாக பிரிக்கப்பட்டுள்ளது.**
**<u>முதல் விசாரணை</u>**

நான் தமிழ்நாடு கனிமவள மேம்பாட்டுத்துறையில் கூடுதல் இயக்குநராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்று தேவகோட்டையில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். கடந்த 08.10.2009ம் தேதி திண்டுக்கல் கனிம வள மேம்பாட்டுத் துறையில் உதவி இயக்குநராக பணியிலிருந்தபோது கனிமவள கடத்துதல் தடுப்பு சம்மந்தமாக நானும், தனித்துணை வட்டாட்சியர் மீனாட்சி சுந்தரம் மற்றும் உதவி புவியியலாளர் திருமதி.ஜோதி ஆகியோர்களுடன் RVS பொறியியல் கல்லூரி அருகே சோதனை மேற்கொண்டோம். அப்போது அந்த வழியாக குளத்துாரிலிருந்து திண்டுக்கல் நோக்கி வந்த செவந்தியம்மாள் என்ற பெயர் பலகையுடன்

கூடிய TN 63 3434 என்ற லாரியை நிறுத்தி சோதனை செய்ய மேற்கொள்ளும்போது மேற்படி லாரி சோதனைக்கு நிற்காமல் சென்றதையடுத்து நாங்கள் இருவரும் வாடகை காரில் லாரியை பின் தொடர்ந்து செல்லமந்தாடி மேம்பாலம் அருகே லாரியை முந்தி குறுக்காக காரை நிறுத்தியபோது லாரியில் வந்த நபர் லாரியை நிறுத்திவிட்டு அங்கிருந்து ஓடி தலைமறைவாகிவிட்டார். அந்த லாரியை சோதனை செய்தபோது சுமார் 2 யூனிட் ஆற்று மணல் இருந்தது.

எவ்விதமான அனுமதிச்சீட்டும் இல்லை. அதனால் மாற்று ஓட்டுனரின் மூலம் மணலுடன் லாரியை அழைத்து வந்தபோது GTN கல்லூரி அருகே TN 57 K 2323 என்ற Hero Honda Splendor ல் வந்த தர்மர் மற்றும் 2 நபர்கள் லாரியை வழிமறித்து லாரி டிரைவரையும், லாரியில் வந்த தனித்துணை வட்டாட்சியர் அவர்களையும், லாரியை எடுத்துச் செல்லக்கூடாது, லாரியை ஒப்படையுங்கள் என்று சொல்லி மிரட்டினார்கள். நான் காரில் பின் சென்றபோது சம்பவத்தைப் பார்த்து திரும்பி GTN கல்லூரிக்கு வந்தபோது என்னைப் பார்த்ததும், தர்மரும், அவருடன் வந்த 2 நபர்களும், அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார்கள். நடந்த சம்பவத்திற்காக திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். வழக்கை தாடிக்கொம்பு காவல் நிலைய எல்கை என்பதால் தாடிக்கொம்பு காவல் நிலையத்திற்கு புகார் மாற்றப்பட்டு தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மணல் திருட்டு சம்மந்தமாக எவ்வாறு விசாரணை செய்யவேண்டும் என்று எனக்குத் தெரியும் என்றால் சரிதான். மணல் திருட்டு சம்மந்தமான குற்றங்கள் என் முன்னால் நடைபெறும்பொழுது நானே நேரடியாக நடவடிக்கை எடுக்க எனக்கு அதிகாரம் உள்ளதா என்றால் உண்டு. அதன்படி எதிரியை கைது செய்தல் அந்த சம்பவத்தின்போது குற்றத்திற்கு பயன்படுத்திய வாகனங்களை கைப்பற்ற எனக்கு அதிகாரம் உள்ளது என்றால் உண்டு. இந்த வழக்கில் சம்பவ இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த சான்று பொருட்களை கைப்பற்றி, அத்தாட்சி, மகஜர் போன்ற ஆவணங்களை தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

2யூனிட் மணலை திருடிச் சென்றதாக எனது புகார் மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கைப்பற்றியதாக சொல்லப்படும் மணல் என்ன வகையான மணல் என்று சட்டவிதிகளின்படி ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். Mines & Minerals விதிகளின் படி நான் மணலை கைப்பற்றியிருந்தால் அதை அத்தாட்சியில் கைப்பற்றி அதன் தன்மையை ஆய்விற்கு அனுப்பி அதை நீதிமன்றத்திற்கு அனுப்பியிருப்பேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது பயன்படுத்திய மேற்படி லாரியை யார் ஓட்டினார் என்பதற்கு அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு V.C. ராஜேந்திரன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நபர் எரியோடு காவல் ஆய்வாளர் இளவரசன் மற்றும் வேடசந்துார் DSP மீது எரியோடு நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு நடந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. எனக்கு மேற்படி விபரம் தெரியும் என்றாலும் அதன் அடிப்படையில்தான் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அதிகாரிகளின் நிர்பந்தத்தின்பேரில் கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல.

மேற்படி மணல் எந்த இடத்தில் இருந்து எடுத்து வரப்பட்டது என்று அந்த இடத்தை ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி திருடப்பட்ட மணல் எடுக்கப்பட்ட இடத்தை ஆய்வு செய்து ஒப்பீடு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு முறையாக ஆய்வறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் நாள் நேரம், இடத்திற்கு மாணிக்கம் என்ற டிரைவரை நியமித்து அவரது வாகனத்தில் சென்றதற்கான ஆவணங்கள் எதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் நாள் நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், மேலதிகாரிகளின் துாண்டுதலின் பேரில் தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் Hero Honda Splendor–ல் வந்து மிரட்டியதற்கு ஆவணங்கள் எதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Hero Honda Splendor–ஐ கைப்பற்றவில்லை என்றால் சரிதான். பொது மக்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 2வதாக கொடுத்த புகாரை இவ்வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் சொன்ன நாள் நேரத்தில் வைத்து எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் ஆய்விற்கு செல்லவில்லை என்றாலும், எந்த வாகனமும் மணலை அள்ளிச் செல்லவில்லை என்றாலும், நான் சொல்வதுபோல் எந்த குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் எங்களை மிரட்டவில்லை என்றாலும் சரியல்ல. சட்டநடைமுறைகளை

பின்பற்றாமலும், அவசர கதியில் உயர் அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் இவ்வழக்கு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை – இல்லை**</u>

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.02.17 10:03:57 +0530

Judicial Magistrate No.II
Dindigul.